# என் விழியில் உன் பார்வை

“வாழ்பவன் நான் அல்ல;
கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்.”

(கலாத்தியர் 2:20)




“இனி நான் வாழ்வதில்லை; கிறிஸ்து என்னுள் வாழ்கிறார்.”

(கலாத்தியர் 2:20)

# என் விழியில் உன் பார்வை

## (கிறிஸ்துவின் பார்வையில் உலகைப் பார்க்கும் அழைப்பு)

**"வானத்துப் பறவைகளை நோக்குங்கள்... காட்டுமலர்ச் செடிகள் எப்படி வளருகின்றன எனக் கவனியுங்கள்."** (மத்தேயு 6:26–28)

பொதுவாக நாம் உலகத்தை நமது ஆசைகள், பயங்கள், கவலைகள் மற்றும் வெளிப்புற தோற்றங்களின் வழியாகப் பார்க்கிறோம். ஆனால் இயேசு படைப்பிலும், மனிதர்களிலும், நிகழ்வுகளிலும் இறைவனின் செயல்பாட்டைக் கண்டார். "என் விழியில் உன் பார்வை" என்பது உலகத்தை கிறிஸ்துவின் கண்களால் காணும் ஆன்மீக அழைப்பாகும்.

### பறவைகள் – பராமரிப்பின் பார்வை

**மனிதன் காண்பது:**

- பறத்தல்
- உணவு தேடுதல்
- குஞ்சுகளைப் பேணுதல்



**இயேசு காண்பது:**

- பிதாவின் பராமரிப்பு
- இறை அக்கறை
- நம்பிக்கையின் பாடம்

"உங்கள் விண்கைத் தந்தை அவற்றுக்கும் உணவு அளிக்கிறார்."
(மத் 6:26)

### காட்டுமலர்கள் – மகிமையின் பார்வை

**மனிதன் காண்பது:**

- நிறம்
- மணம்
- அழகு



**இயேசு காண்பது:**

- இறைவனின் படைப்பாற்றல்
- அருளின் அழகு
- தந்தையின் மகிமை

"சாவமோன் கூட இவற்றைப் போல் அணிந்திருந்ததில்லை."
(மத் 6:29)

### ஆலயம் – நிலையற்றதும் நித்தியமும்

**சீடர்கள் கண்டது:**

- பிரமாண்ட கட்டிடம்
- அழகான கற்கள்
- மனித மகிமை



**இயேசு கண்டது:**

- நிலையற்ற தன்மை
- காலத்தின் தீர்ப்பு
- இறையாட்சியின் நித்தியம்

ஒரு கல்லும் மற்றொரு கல்லின்மேல் இராது.
(மத் 24:2)

### சகேயு – பாவியிலிருந்து மகன் வரை

**மக்கள் கண்டது:**

- வரி வசூலிப்பவன்
- பாவி
- துரோகி



**இயேசு கண்டது:**

- மீட்கப்பட வேண்டிய மகன்
- மாற்றத்திற்கு உரிய இதயம்

"இவனும் ஆபிரகாமின் மகனே."
(லூக் 19:9)

### சிலுவை – தோல்வியா? வெற்றியா?

**உலகம் கண்டது:**

- அவமானம்
- தோல்வி
- மரணம்



**இயேசு கண்டது:**

- மீட்பு
- அன்பின் வெற்றி
- உயிர்ப்பு

"எல்லாம் நிறைவேறிற்று."
(யோவான் 19:30)

## கிறிஸ்துவின் பார்வையின் மூன்று பண்புகள்

**இரக்கத்தின் பார்வை**
பாவியிலும் இறைவனின் சாயலைக் காண்கிறது.

**உண்மையின் பார்வை**
வெளிப்புற தோற்றத்தைத் தாண்டி உள்ளார்ந்த உண்மையைக் காண்கிறது.

**நம்பிக்கையின் பார்வை**
தோல்வியிலும் இறைவனின் திட்டத்தைக் காண்கிறது.

## தியான ஜெபம்



ஆண்டவரே, பறவைகளில் உமது பராமரிப்பைக் காணும் கண்களைத் தாரும்.
மலர்களில் உமது மகிமையைக் காணும் பார்வையைத் தாரும்.
மனிதர்களில் உமது சாயலைக் காணும் இதயத்தைத் தாரும்.
உலகத்தை என் கண்களால் அல்ல, உமது கண்களால் காண அருள் தாரும்.

"வாழ்பவன் நான் அல்ல; கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்." (கலாத்தியர் 2:20)





மனிதன் காட்சியைக் காண்கிறான்
இயேசு அர்த்தத்தைக் காண்கிறார்.

மனிதன் படைப்பைப் பார்க்கிறான்;
இயேசு படைப்பாளரைக் காண்கிறார்.

**அதுவே — "என் விழியில் உன் பார்வை."**

# என் விழியில் உன் பார்வை

அ.அல்போன்ஸ் திருச்சி

இயேசுவின் போதனைகளில் ஒரு தனித்துவமான அம்சம் காணப்படுகிறது. அவர் மக்களுக்கு இறையாட்சியின் இரகசியங்களை விளக்கும்போது, பெரிய தத்துவங்களையோ சிக்கலான இறையியல் கருத்துக்களையோ முதலில் எடுத்துக்கொள்ளவில்லை. மாறாக, அவர்கள் தினமும் பார்த்துக் கொண்டிருந்த வானத்துப் பறவைகளையும், வயல்வெளிகளில் மலர்ந்திருந்த காட்டுமலர்களையும் சுட்டிக்காட்டினார். ஏனெனில் இயேசுவின் பார்வையில், படைப்பு என்பது இறைவனின் மௌன நற்செய்தியாகும்.

இயேசு தனது மலைப்பொழிவில் மக்களுக்குப் பெரிய இறையியல் கோட்பாடுகளை மட்டும் கற்பிக்கவில்லை. மாறாக, அவர்கள் தினமும் பார்த்துக்கொண்டிருந்த பறவைகளையும், பாதையோரங்களில் பூத்திருந்த காட்டுமலர்களையும் சுட்டிக்காட்டி, இறையாட்சியின் மறைவான உண்மைகளை வெளிப்படுத்தினார்.

## வானத்துப் பறவைகள்

**"**வானத்துப் பறவைகளை நோக்குங்கள்...'' (மத் 6:26)

வானத்துப் பறவைகளை நோக்குங்கள்; அவை விதைப்பதுமில்லை; அறுப்பதுமில்லை; களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை. உங்கள் விண்ணகத் தந்தை அவற்றுக்கும் உணவு அளிக்கிறார். அவற்றைவிட நீங்கள் மேலானவர்கள் அல்லவா! கவலைப் படுவதால் உங்களில் எவர் தமது உயரத்தோடு ஒரு முழம் கூட்ட முடியும் (மத்:6:26)

பொதுவாக நாம் பறவைகளைப் பார்க்கும்போது என்ன பார்க்கிறோம்?

- அவை வானத்தில் பறக்கின்றன.
- இனிமையாகக் குரலிடுகின்றன.
- கூட்டில் குஞ்சுகளுக்கு உணவூட்டுகின்றன.
- மரங்களில் அமர்கின்றன.
- உணவைத் தேடி அங்குமிங்கும் செல்கின்றன.

இது சாதாரண மனிதப் பார்வை.

ஆனால் இயேசு பறவைகளைப் பார்த்தபோது, அவர் பறப்பதைக் காணவில்லை; பிதாவின் பராமரிப்பைக் கண்டார்.

அவர் சிறகுகளைக் காணவில்லை;

இறைவனின் கரங்களைக் கண்டார்.

அவர் பறவையின் வாழ்க்கையைப் பார்க்கவில்லை;

இறை அன்பின் செயல்பாட்டைப் பார்த்தார்.

இது இயேசுவின் மாறுபட்ட பார்வை

''வானத்துப் பறவைகளை நோக்குங்கள்; அவை விதைப்பதுமில்லை; அறுப்பதுமில்லை; களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை. உங்கள் விண்ணகத் தந்தை அவற்றுக்கும் உணவு அளிக்கிறார். அவற்றைவிட நீங்கள் மேலானவர்கள் அல்லவா?'' (மத்: 6:26)




இதுவே இயேசுவின் பார்வைக்கும் மனிதனின் பார்வைக்கும் உள்ள வித்தியாசம்.

1. மனிதன் நிகழ்வைப் பார்க்கிறான்; இயேசு அதன் பின்னால் செயல்படும் தந்தையைக் காண்கிறார்.

ஒரு பறவை மண்ணில் தானியங்களைத் தின்று கொண்டிருக்கிறது.

நாம் சொல்வோம்: ''அது உணவைத் தேடி கண்டுபிடித்தது.''

ஆனால் இயேசு சொல்கிறார்: ''உங்கள் விண்ணகத் தந்தை அதற்கு உணவு அளிக்கிறார்.''

இங்கு இறையியல் ரீதியாக மிகப்பெரிய உண்மை இருக்கிறது.

மனிதன் காரணங்களைப் பார்க்கிறான். இயேசு காரணங்களுக்குப் பின்னால் இருக்கும் கர்த்தரை பார்க்கிறார்.

மனிதன் தானியத்தைக் காண்கிறான். இயேசு தானியத்தை வழங்கும் தந்தையைக் காண்கிறார்.

2. மனிதன் உழைப்பைப் பார்க்கிறான்;

இயேசு நம்பிக்கையைப் பார்க்கிறார்.

உண்மையில் பறவைகள் சோம்பேறிகள் அல்ல.

அவை காலையில் எழுந்து உணவைத் தேடுகின்றன.

ஆனால் இயேசு அவற்றின் உழைப்பைப் பற்றிப் பேசவில்லை.

அவற்றின் பயமற்ற வாழ்க்கையைப் பற்றி பேசுகிறார்.

பறவைகள் நாளைக்காக கிடங்குகள் கட்டுவதில்லை.

அவை அடுத்த ஆண்டுக்கான உணவை சேமிப்பதில்லை.

ஆனாலும் அவை பாடுகின்றன. ஏன்?

ஏனெனில் அவற்றின் வாழ்க்கை இறைவனின் பராமரிப்பில் இருக்கிறது. இயேசு பறவைகளில் நம்பிக்கையின் இறையியலை காண்கிறார்.

3. பறவைகளில் இயேசு கண்டது – படைப்பின் திருச்சபை

புனித பிரான்சிஸ் அசிசியார் பறவைகளை ''சகோதரிகள்'' என்று அழைத்தார். ஏன்?

ஏனெனில் இயேசுவைப் போல அவரும் படைப்பில் இறைவனின் அன்பைக் கண்டார்.

பறவைகள் ஒரு மௌனப் பிரசங்கம் செய்கின்றன:

''எங்களைப் பராமரிக்கும் இறைவன் உங்களையும் பராமரிப்பார்.''

அவற்றின் சிறகுகள் ஒரு இறையியல் நூலாக மாறுகின்றன.
அவற்றின் குரல் ஒரு துதி பாடலாக மாறுகிறது.


## காட்டுமலர்ச் செடிகள்

''காட்டுமலர்ச் செடிகள் எப்படி வளருகின்றன எனக் கவனியுங்கள்; அவை உழைப்பதுமில்லை, நூற்பதுமில்லை. ஆனால் சாலமோன் கூடத் தம் மேன்மையில் எல்லாம் அவற்றில் ஒன்றைப் போலவும் அணிந்திருந்ததில்லை'' (மத்:6:28)

முன்பு நாம் பறவைகளைப் பற்றி பார்த்தோம். இப்போது இயேசு காட்டுமலர்களைப் பற்றி பேசுகிறார்.

இந்த வசனத்தில் இயேசு ஒரு ஆழமான ஆன்மீக இரகசியத்தை கற்பிக்கிறார். அவர் '' காட்டுமலர்ச் செடிகளை பாருங்கள்'' என்று கூறவில்லை; கவனியுங்கள் என்று கூறுகிறார்.





இது ஆன்மீகத்திலும், கிறிஸ்தவ தியான மரபிலும் காணப்படும் ''விழிப்புணர்வான பார்த்தல்'' என்ற அனுபவமாகும்

பொதுவாக நாம் காட்டுமலர்களைப் பார்க்கும்போது என்ன பார்க்கிறோம்?

- அவை அழகாக பூத்திருக்கின்றன.
- பல நிறங்களில் இருக்கின்றன.
- காற்றில் அசைகின்றன.
- சில நாட்களில் வாடிவிடுகின்றன.

இது சாதாரண மனிதப் பார்வை.

ஆனால் இயேசு மலர்களைப் பார்த்தபோது, அவர் அதன் நிறத்தையோ வடிவத்தையோ மட்டும் காணவில்லை. அவர் இறைவனின் படைப்பாற்றலையும், பராமரிப்பையும், மகிமையையும் கண்டார்.

1. நாம் மலரைப் பார்க்கிறோம்; இயேசு வளர்ச்சியின் இரகசியத்தைப் பார்க்கிறார்.

இயேசு சொல்கிறார்: ''அவை எப்படி வளருகின்றன எனக் கவனியுங்கள்.'' இது மிகவும் ஆழமான வார்த்தை.

ஒரு விதை மண்ணுக்குள் விழுகிறது. இருளில் மறைந்து கிடக்கிறது. மெல்ல வேர்விடுகிறது. துளிர்க்கிறது. மலர்கிறது.

இந்த மறைவான செயல்முறையை இயேசு பார்க்கிறார்.

மனிதன் மலரைப் பார்க்கிறான்.

இயேசு மலருக்குள் செயல்படும் இறைவனின் கையைப் பார்க்கிறார்.

2. மனிதன் சாதனையைப் பார்க்கிறான்; இயேசு அருளைப் பார்க்கிறார்

உலகம் சொல்லும்:''உழைத்தால் உயரலாம்.''. ஆனால் இயேசு காட்டுமலரைச் சுட்டிக்காட்டி: ''அது உழைப்பதுமில்லை; நூற்பதுமில்லை.'' என்று சொல்கிறார். இது உழைப்புக்கு எதிரான போதனை அல்ல. இது அருளின் இறையியல்.
மலர் தனது அழகை உருவாக்கவில்லை. அது பெற்றுக்கொண்டது.
அதுபோல மனித வாழ்வின் மிகப்பெரிய கொடைகள்:

- உயிர்
- அன்பு
- நம்பிக்கை
- இரட்சிப்பு

இவை அனைத்தும் இறைவனின் அருளால் கிடைத்தவை.
3. நாம் வெளிப்புற அழகைக் காண்கிறோம்; இயேசு இறை மகிமையைக் காண்கிறார்.
மக்கள் சாலமோனைப் பார்த்தால்:

- அரச உடைகள்
- தங்க மகுடம்
- ராஜ மகிமை

இவற்றைக் காண்பார்கள்.
ஆனால் இயேசு சொல்கிறார்: ''சாலமோன் கூட ஒரு காட்டுமலரைப் போல அழகாக இருக்கவில்லை.'' ஏன்? ஏனெனில் சாலமோனின் ஆடை மனிதக் கைகளால் உருவாக்கப்பட்டது. ஆனால் மலரின் அழகு இறைவனின் கைகளால் உருவாக்கப்பட்டது.
இங்கு இயேசு கூறுவது:
இறைவன் படைத்த எளிமையான ஒன்று, மனிதன் உருவாக்கும் மிகப்பெரிய மகிமையைவிட உயர்ந்தது.

4. மனிதன் நிலையற்ற தன்மையைக் காண்கிறான்; இயேசு இறை அக்கறையைக் காண்கிறார்.
காட்டுமலர் இன்று பூக்கிறது.
நாளை வாடிவிடுகிறது.
நாம் அதன் குறுகிய ஆயுளைப் பார்க்கிறோம்.
இயேசு சொல்கிறார்:
''இன்று இருக்கும் புல்லை இறைவன் இவ்வளவு அழகுபடுத்தினால், உங்களை எவ்வளவு அதிகமாகக் கவனிப்பார்!''
இயேசுவின் கவனம் மலரின் நிலையற்ற தன்மையில் இல்லை.
அதை அலங்கரிக்கும் தந்தையின் அன்பில் உள்ளது.

**இயேசுவின் பார்வை.**

**நற்செய்திகளில் மீண்டும் மீண்டும் வெளிப்படும் கிறிஸ்துவின் பார்வையாகும்.**

இயேசுவின் பார்வை – பொருளிலிருந்து படைப்பாளருக்கு

பறவைகளைப் பார்த்தபோது:

அவர் பிதாவின் பராமரிப்பைக் கண்டார்.

மலர்களைப் பார்த்தபோது:

அவர் பிதாவின் அழகையும் மகிமையையும் கண்டார்.

அதனால் இயேசுவின் பார்வை எப்போதும் படைப்பிலிருந்து படைப்பாளருக்கு செல்கிறது.

காட்சியிலிருந்து காணப்படாத இறைவனை நோக்கிச் செல்கிறது.

வெளிப்புறத்திலிருந்து உள்ளார்ந்த உண்மையை நோக்கிச் செல்கிறது.

''இயேசு நோக்கினார்...'' –

நற்செய்தி நூல்களில் பல இடங்களில் ''இயேசு பார்த்தார்'', ''இயேசு நோக்கினார்'', ''இயேசு அவரை உற்றுப் பார்த்தார்'' என்ற வார்த்தைகள் வருகின்றன. இயேசுவின் பார்வை வெறும் கண்களின் செயலல்ல; அது அன்பின் வெளிப்பாடு,

அழைப்பின் மொழி,

மாற்றத்தின் சக்தி,

இரட்சிப்பின் தொடக்கம்.

பார்த்தல் என்பது வெறும் கண்களால் காண்பது அல்ல; அது முழுமையான விழிப்புணர்வுடன், தீர்ப்புகள் இல்லாமல், மனத்தின் கருத்துக்களைத் தாண்டிக் காண்பது ஆகும்.

பொதுவாக ''நாம் உண்மையில் பார்க்கவில்லை; நாம் நினைப்பதையே பார்க்கிறோம்.''ஒரு மனிதனைப் பார்க்கும்போது, அவன் யார் என்பதைப் பார்ப்பதற்குப் பதிலாக, நமது முன் அனுபவங்கள், விருப்பு–வெறுப்புகள், கருத்துகள் ஆகியவற்றின் வழியாகவே பார்க்கிறோம்.



ஆனால் உண்மையான பார்த்தல் என்பது:

- பெயரிடாமல் பார்ப்பது
- தீர்ப்பு வழங்காமல் பார்ப்பது
- ஒப்பிடாமல் பார்ப்பது
- கடந்த கால நினைவுகளை இடையில் கொண்டுவராமல் பார்ப்பது

**இயேசுவின் பார்வையும் நமது பார்வையும்**

**1. செல்வந்த இளைஞனை இயேசு நோக்கினார்**


''இயேசு அன்பொழுக அவரைக் கூர்ந்து நோக்கி.'' (மாற்கு 10:21)
செல்வந்த இளைஞன் கட்டளைகளைக் கடைப்பிடித்திருந்தாலும், அவனது இதயம் செல்வத்தில் கட்டுண்டிருந்தது. இயேசு அவனை நீதிமானாகவோ, பாவியாகவோ முதலில் பார்க்கவில்லை. அவர் அவனை **அன்போடு** நோக்கினார்.
இந்த பார்வை கூறும் செய்தி:
*''நீ இருப்பது போலவே நான் உன்னை நேசிக்கிறேன்; ஆனால் நீ இருப்பதைவிட உயர்ந்த நிலைக்கு உன்னை அழைக்கிறேன்.''*
கிறிஸ்துவின் பார்வை எப்போதும் நம்முடைய குறைகளை விட நம்முடைய அழைப்பைக் காண்கிறது.

**2. பேதுருவை நோக்கிய இயேசுவின் பார்வை**



''ஆண்டவர் திரும்பி, பேதுருவைக் கூர்ந்து நோக்கினார்.'' (லூக்:22:61)
மூன்று முறை மறுத்தபின்னர், இயேசு பேதுருவைப் பார்த்தார்.
அந்தப் பார்வையில் கோபம் இல்லை.
அவமானப்படுத்துதல் இல்லை.
தண்டனை இல்லை.
அதில் அன்பு, மன்னிப்பு, மீண்டும் எழச் செய்யும் அழைப்பு இருந்தது.
அந்த ஒரு பார்வை பேதுருவை அழ வைத்தது.
சில நேரங்களில் ஒரு பிரசங்கம் செய்ய முடியாததை, கிறிஸ்துவின் அன்பான பார்வை செய்து விடுகிறது.


**3. சகேயுவை நோக்கிய பார்வை**



''இயேசு அந்த இடத்திற்கு வந்தவுடன், அண்ணாந்து பார்த்து அவரிடம்'' (லூக்:19:5)
கூட்டம் சகேயுவைப் பார்த்தபோது, ஒரு ஊழல்வாதியைப் பார்த்தது.
இயேசு பார்த்தபோது, ஒரு மாற்றப்பட வேண்டிய மகனைக் கண்டார்.
இறையியல் ரீதியாக இது மிகப் பெரிய உண்மை.
மனிதன் கடந்த காலத்தைப் பார்க்கிறான்;
கடவுள் எதிர்காலத்தைப் பார்க்கிறார்.
கிறிஸ்துவின் பார்வை எப்போதும் நம்பிக்கையின் பார்வை.

**4. விதவையின் காணிக்கையை நோக்கிய பார்வை**

‘‘ஒரு கைம்பெண்ணும் இரண்டு காசுகளை* அதில் போடுவதைக் கண்டார் (லூக்: 21:1–4) பலர் பெரிய தொகைகளைச் செலுத்தினர்.



ஒரு ஏழை விதவை இரண்டு சிறிய காசுகளை மட்டும் கொடுத்தாள்.

உலகம் தொகையைப் பார்த்தது.

இயேசு தியாகத்தைப் பார்த்தார்.

உலகம் வெளிப்புறத்தை அளக்கிறது.

கிறிஸ்து இதயத்தை அளக்கிறார்.

நமது விழிகளில் கிறிஸ்துவின் பார்வை வந்தால், வெளிப்புற வெற்றிகளை அல்ல; உள்ளார்ந்த உண்மைகளைப் பார்க்கத் தொடங்குவோம்.

**5. அழகான ஆலயம்**



இயேசு எருசலேம் கோவிலைவிட்டு வெளியே வந்தபோது அவருடைய சீடருள் ஒருவர் ‘‘போதகரே, எத்தகைய கற்கள்! எத்தகைய கட்டடங்கள்! பாரும்’’ என்று அவரிடம் சொல்ல, இயேசு அவரை நோக்கி, ‘‘இந்த மாபெரும் கட்டடங்களைப் பார்க்கிறீர் அல்லவா! இங்குக் கற்கள் ஒன்றின்மேல் ஒன்று இராதபடி எல்லாம் இடிக்கப்படும்’’ என்றார்.
(மாற்கு 13:1)

இயேசு அவரிடம், ‘‘இந்த மாபெரும் கட்டடங்களைப் பார்க்கிறீர் அல்லவா! இங்குக் கற்கள் ஒன்றின்மேல் ஒன்று இராதபடி எல்லாம் இடிக்கப்படும்’’ என்றார்.’’ என்றார்.
(மாற்கு 13:2)

இது மனித பார்வைக்கும் கிறிஸ்துவின் பார்வைக்கும் உள்ள வித்தியாசத்தை மிக அழகாக வெளிப்படுத்தும் ஒரு நிகழ்வு.

சீடர்களின் பார்வை – வெளிப்புற மகிமை

எருசலேம் ஆலயம் யூதர்களின் பெருமையின் அடையாளம்.

- வெண்மையான பளிங்குக் கற்கள்
- தங்க அலங்காரங்கள்
- பிரமாண்டமான கட்டிட அமைப்பு

- மதத்தின் மையம்

சீடர்கள் ஆலயத்தைப் பார்த்தபோது அதன் அழகையும் பிரமாண்டத்தையும் கண்டு வியந்தனர்.
அவர்களின் பார்வை:
''எவ்வளவு பெரியது!''
''எவ்வளவு அழகானது!''
''எவ்வளவு வலிமையானது!''
என்பதில் நின்றது.இது மனிதனின் இயல்பான பார்வை.
மனிதன் கண்களுக்குத் தெரியும் மகிமையால் ஈர்க்கப்படுகிறான்.

இயேசுவின் பார்வை – நித்திய உண்மை
இயேசு அதே ஆலயத்தைப் பார்த்தபோது, அதன் கற்களையோ தங்கத்தையோ காணவில்லை. அவர் அதன் நிலையற்ற தன்மையைக் கண்டார். அவர் கூறினார்:
''இவை அனைத்தும் இடிக்கப்படும்.''
சீடர்கள் நிகழ்கால அழகைக் கண்டனர்.
இயேசு எதிர்கால உண்மையைக் கண்டார்.
சீடர்கள் வெளிப்புற கட்டிடத்தைக் கண்டனர்.
இயேசு உள்ளார்ந்த ஆன்மீக வெற்றிடத்தைக் கண்டார்.

இறையியல் அர்த்தம்
இங்கு இயேசு ஆலயத்தை அவமதிக்கவில்லை.
மாறாக அவர் ஒரு ஆழமான உண்மையைக் கற்பிக்கிறார்:
மனிதன் உருவாக்கும் எல்லாம் நிலையற்றது.
இறைவன் உருவாக்குவது மட்டுமே நிலையானது.
சீடர்கள் கற்களின் அழகைக் கண்டனர்.
இயேசு இறைவனின் அரசாட்சியின் நிலைத்தன்மையைக் கண்டார்.

**6. கூட்டத்தை நோக்கிய இயேசுவின் பார்வை**

''திரண்டிருந்த மக்களை அவர் கண்டபோது அவர்கள்மேல் பரிவு கொண்டார்; அவர்கள் ஆயர் இல்லா ஆடுகளைப் போல அலைக்கழிக்கப்பட்டு சோர்ந்து காணப்பட்டார்கள்.'' (மத்:9:36)

கூட்டத்தைப் பார்த்த அனைவரும் ஒரு மக்கள்தொகையைக் கண்டனர்.
இயேசு மேய்ப்பன் இல்லாத ஆடுகளைக் கண்டார்.
இது இரக்கத்தின் பார்வை.

கிறிஸ்து நம்முள் வாழும்போது, நாம் மக்களின் தவறுகளை எண்ணுவதற்கு முன், அவர்களின் காயங்களை உணரத் தொடங்குவோம்.

''இயேசு சகேயுவைப் பற்றிய சமூகத்தின் கருத்துக்களைப் பார்க்கவில்லை; அவனுடைய உண்மையான இருப்பைப் பார்த்தார்.'' அதுதான் உண்மையான பார்த்தல்.

''இனி வாழ்பவன் நான் அல்ல; கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்'' என்ற அனுபவத்துடன் ஒப்பிடப்படலாம்.



அதாவது:

- ''நான்'' குறைகிறது.
- அன்பு அதிகரிக்கிறது.
- தனித்தன்மை கரைகிறது.
- இறைநிலை வெளிப்படுகிறது.

''நம் விழியில் கிறிஸ்துவின் பார்வை'' வர வேண்டும். உலகத்தை அகந்தையின் கண்களால் அல்ல, அன்பும் விழிப்புணர்வும் நிறைந்த இறை ஒளியின் கண்களால் நாம் பார்ப்பதாகும்.

அப்போது நாம் மனிதர்களின் குற்றங்களை அல்ல, அவர்களின் உள்ளிருக்கும் இறைமகிமையைப் பார்க்கத் தொடங்குவோம். அந்த நிலையே பவுல் கூறிய:

''வாழ்பவன் நான் அல்ல; கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்.'' (கலா'': 2:20) என்ற ஆன்மீக அனுபவத்தின் ஆழமான வெளிப்பாடாகும்.

**''என் விழியில் உன் பார்வை''**



அது ஒரு ஆழமான ஜெபம். *''ஆண்டவரே, நான் உலகத்தை என் கண்களால் பார்க்க வேண்டாம்; உமது கண்களால் பார்க்க அருள் தாரும். நான் காண்பதெல்லாம் உமது அன்பின் வெளிப்பாடாக மாறட்டும். வாழ்பவன் நான் அல்ல; நீரே என்னுள் வாழ்ந்து, என் விழிகளில் உமது பார்வையைப் பதியச் செய்க.''* என்ற ஆன்மீக ஏக்கத்தின் வெளிப்பாடாகும். அதுவே இயேசு பறவைகளையும் மலர்களையும் நோக்கிக் கண்ட இறை இரகசியத்தை நாமும் காணும் புதிய பார்வையின் தொடக்கமாகும்.

என் விழிகளில் உமது பார்வை குடிகொள்ளட்டும்.

அப்போது நான் அல்ல, நீரே என்னுள் வாழ்வீர்.